## வகுப்பு - 7 - பருவம் - 3 - விலங்கியல்

## 5 - அன்றாட வாழ்வில் விலங்குகள்

36. மிருதுவான மற்றும் விலை உயர்ந்த சால்வை எந்த விலங்கிலிருந்து பெறப்படுகின்றது?

(1) லாமா (2) அங்கோரா (3) சடை எருமை (4) பஸ்மினா

37. பட்டு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?

(1) இந்தியா (2) சீனா (3) ரஷ்யா (4) அமெரிக்கா

38. தாவரத்தின் இனப்பெருக்கத்திற்கு பெரிதும் உதவும் விலங்கு எது?

(1) புலி (2) ஆடு (3) தேனீக்கள் (4) மைனா

39. வெள்ளிப் புரட்சி என்பது எதைக் குறிக்கும்?

(1) பால் உற்பத்தி (2) பட்டு உற்பத்தி (3) பருத்தி உற்பத்தி (4) முட்டை உற்பத்தி

40. அதிக தேனைக் கொடுக்கும் தேனீ இனம் ______.

(1) ஏபிஸ் டார்சேட் (2) ஏபிஸ் புளோரியா (3) ஏபிஸ் இண்டிகா (4) ஏபிஸ் மெல்லிபெரா

41. கீழ்க்கண்டவற்றுள் எது பட்டு வகை அன்று?

(1) மல்பெரி பட்டு (2) எரி பட்டு (3) காஞ்சி பட்டு (4) முகா பட்டு

42. தோலினைச் சேதப்படுத்தாமல் கம்பளிக்காக உரோமம் எடுக்கும் முறை ______.

(1) எக்கோகிளிப் (2) ஆட்டோகிளிப் (3) பயோகிளிப் (4) இவை அனைத்தும்

43. கீழ்க்கண்டவற்றுள் எது இந்திய தேனீ இனம் அன்று?

(1) ஏபிஸ் மெல்லிபெரா (2) ஏபிஸ் டார்சேட்டா

(3) ஏபீஸ் புளோரியா (4) ஏபீஸ் இன்டிகா

44. கீழ்க்கண்டவற்றுள் எந்த கூட்டுப்பொருள் தேனில் இல்லை?

(1) சர்க்கரை (2) கொழுப்பு (3) தாது உப்பு (4) நீர்

45. கீழ்க்கண்டவற்றுள் எது பட்டின் பயன் அன்று?

(1) பட்டாடை (2) தொலைபேசி (3) வார்னீஸ் (4) பாராசூட்

46. அச்சு மை தயாரிக்கப் பயன்படும் பூச்சி எது?

(1) வண்ணத்துப். பூச்சி (2) பட்டுப்பூச்சி

LIVEWORKSHEETS

(3) அரக்கு பூச்சி (4) கம்பளி பூச்சி

47. கம்பளி இழை எதனால் ஆனது?

(1) புரதம் (2) கார்போஹைட்ரேட் (3) கொழுப்பு (4) நீர் சத்து

48. முதன் முதலில் பட்டாடை உடுத்திய சைலிங்ஸி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(1) இந்தியா (2) இலங்கை (3) சீனா (4) ஜப்பான்

49. தமிழ்நாட்டின் மாநில விலங்கு எது?

(1) யானை (2) புலி (3) வரையாடு (4) சிறுத்தை

50. கூற்று 1: முட்டைக்காக வளர்க்கப்படும் கோழி, முட்டையிடும் கோழி

கூற்று 2 : கறிக்காக வளர்க்கப்படும் கோழி பிராய்லர் எனப்படும்

(1) கூற்று 1 சரி 2 தவறு (2) கூற்று 1 தவறு 2 சரி

(3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

51. பட்டுப் புழுவின் லார்வாக்கள் எத்தனை நாட்கள் மல்பெரி இலையை உண்டு வாழும்?

(1) 42 (2) 37 (3) 35 (4) 43

52. பட்டு இழைகள் மருத்துவத் துறையில் அறுவைச் சிகிச்சையின் போது ________ ஆகப் பயன்படுகிறது.

(1) மருந்து கட்டும் துணி (2) தையல் நூல்

(3) இரத்தக் அழிவுகளை அகற்ற (4) அனைத்தும்

53. பட்டுப் பூச்சிகள், அவற்றின் ஆரம்ப எடையைவிட எத்தனை மடங்கு மல்பெரி இலைகளை உண்ணும்?

(1) 40000 (2) 50000 (3) 70000 (4) எதுவுமில்லை

54. கூட்டுப் புழுக்களைக் கொல்லாமல், மனிதநேய அடிப்படையில், பாரம்பரிய முறைப்படி அல்லாது, உருவாக்கப்படும் பட்டு யாது?

(1) அகிம்சைப் பட்டு (2) அமைதிப் பட்டு (3) ஆரணிப் பட்டு (4) 1 மற்றும் 2

55. அமைதிப் பட்டு ________ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

(1) 1990 (2) 1980 (3) 1999 (4) 1992

NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:

LIVEWORKSHEETS

56. விலங்குகளின் தோலில் இருந்து பெறப்படும் தடித்த உரோமங்கள் _______ ஆல் ஆனது.

(NMMS - 2020)

(1) கொழுப்பு (2) புரதம் (3) கார்போஹைட்ரேட் (4) பொட்டாசியம்

57. தமிழ்நாட்டில் மாநில விலங்கு _______.

(NMMS 2019-2020)

(1) வரையாடு (2) செம்மறி ஆடு (3) வெள்ளாடு (4) லாமா

LIVEWORKSHEETS